இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 28.04.2025



# கலைஞர் பல்கலைக் கழகம்!



**தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞரே ஒரு பல்கலைக் கழகம். அவர் பெயரால் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

கலைஞர் பல்கலைக் கழகம் கும்பகோணத்தில் அமைக்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பும் மிகச் சிறப்புக்குரியது ஆகும். திராவிட இயக்கத்தின் மாணவர் இயக்க மாநாடு முதன்முதலாக நடந்த இடம் கும்பகோணம். திராவிட இயக்கச் சிந்தனை கொண்ட மாணவக் கண்மணிகள் 1940களில் அங்கிருந்து தான் தங்களது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்கள். அத்தகைய மாணவர்களில் ஒருவர் தான் கலைஞர்.திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் அமைத்து நடத்தி வந்த மாணவர் கலைஞர் அவர்கள், இந்த மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

திராவிடர் கழகம் உருவாகும் முன்பே 1943 ஆம் ஆண்டு திராவிட மாணவர் கழகம் உருவாகிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இதற்கான மாநாட்டைத் தொடக்கி வைத்தார்கள். அத்தகைய ஊரில் கலைஞர் பெயரால் பல்கலைக் கழகம் அமைவது பொருத்தமானது.

**கோவையில் வேளாண் பல்கலைக் கழகம் - சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்- சென்னையில் கால்நடைப் பல்கலைக் கழகம் - டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகம் - உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் - நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் - சேலம் பெரியார் பல்கலைக் கழகம் - கோவை, திருச்சி, மதுரை, நெல்லையில் அண்ணா தொழில்நுட்ப பல்கலைக் கழகங்கள் - திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களை எல்லாம் அமைத்தவர் கலைஞர். அவர் பெயரால் பல்கலைக் கழகம் அமைவது பொருத்தமானது.**

**புதுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி என்று முதல்வர் கலைஞர் அறிவித்த பிறகுதான் பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் பள்ளிகளை நோக்கி வந்தார்கள். இதை அறிந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களே, 'எனக்கு இது மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கலைஞர் கருணாநிதியிடம் சொல்லுங்கள்' என்று சொல்லி அனுப்பினார்கள்.**

தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளை அதிகப்படுத்தினார் முதல்வர் கலைஞர். அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் அமைத்தார். உடற்கல்வியை கட்டாயம் ஆக்கினார். அறிவியல் பாடங்களை அதிகப்படுத்தி, அறிவியல் கூடங்களை அமைத்தார். பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கினார். தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் அமைத்தார். கிராமப்புற மாணவர்களுக்கும், குடும்பத்தில் முதல் பட்டதாரிகளுக்கும் சலுகைகள் கொடுத்தார். அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கினார். தமிழ் வழிப்படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தார். கணினி பாடத்தை அறிமுகம் செய்தார்!.

**தி.மு.க.வின் முதல் ஆட்சி காலத்திலேயே தமிழகத்தில் ஏராளமான அரசு கல்லூரிகள் உருவாக்கப் பட்டன. 1947 முதல் 67 வரையிலான 20 ஆண்டு காலத்தில் திறக்கப்பட்ட மொத்த கல்லூரிகள் 68 தான். ஆனால் கலைஞர் முதல்வராக இருந்த 1969 முதல் 1975 காலக்கட்டத்தில் 97 அரசு கல்லூரிகள் திறக்கப்பட்டது. அதனால்தான் காமராசர் காலம் 'பள்ளிக் கல்வியின் பொற்காலம்' என்றால், கலைஞர் காலம், 'கல்லூரிக் கல்வியின் பொற்காலம்' என்கிறோம்.**

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து 1000க்கும் மேற்பட்ட பாடப்புத்தகங்களை வெளியிட்டார். தமிழை கணினிமொழி ஆக்கினார். தமிழ் பயிற்று மொழிக்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். இன்று பள்ளிக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை தமிழில் படிக்கலாம் என்ற நிலையை உருவாக்கினார் கலைஞர்.

தமிழ்நாட்டின் உயர் கல்வி வளர்ச்சியில் தலைவர் கலைஞர் அவர்களின் பங்கு அளப்பரியது. தமிழ்நாட்டில் உயர் கல்வி செழித்தோங்கிட வேண்டுமென்ற முனைப்போடு அவர் தீட்டிய திட்டங்கள் ஏராளம். தமிழ்நாட்டின் மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற முனைப்போடு, அனைத்துத் துறைகளிலும் ஒரு பல்கலைக் கழத்தை உருவாக்கிட வேண்டுமென்று அவர் திட்டங்களைத் தீட்டினார்.

மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரி உருவாக்க வேண்டும் என்பதும் அவரது சிந்தனையில் தான் முதன்முதலாக உதித்தது. இன்றைக்குத் தமிழ்நாடு கல்வியிலும், தொழில் துறையிலும் முன்னேற்றம் கண்டுள்ளது என்றால், அதற்கான அடித்தளங்களை உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர் அவர்கள்தான்.

உயர் கல்வி படிக்க வருபவர்களுக்கு நுழைவுத் தேர்வு இருந்தது. அந்த நுழைவுத் தேர்வு முறையை 2007 ஆம் ஆண்டு ரத்து செய்தார் முதலமைச்சர் கலைஞர். இதன் மூலமாகத் தான் அனைவருக்கும் உயர் கல்வி சாத்தியமானது.

**தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வி, இன்று தமிழகத்தில் மிகப்பெரிய கல்விப் புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிறது. ஊருக்குள் பள்ளிகள், நகரங்களில் கல்லூரிகள், மாவட்டங்களில் பல்கலைக் கழகங்கள் என உருவாக்கினார் கலைஞர்.. நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். இதன் மூலமாக கல்வியானது ஏழை - பணக்காரன், நகரம் - கிராமம் என எந்த வேறுபாடும் இல்லாமல் சீராக வளர்ந்தது.**

இது கணினி - தொழில் நுட்ப உலகமாக இருக்கிறது. இப்படி இருக்கும் என்பதை 1996 ஆம் ஆண்டே கணித்தவர் கலைஞர். 1997-ஆம் ஆண்டே தகவல் தொழில் நுட்பக் கொள்கையை முதன் முதலில் தமிழ்நாட்டிற்கு வகுத்துக் கொடுத்தார் முதல்வர் கலைஞர். தரமணியில் 'டைடல் பார்க்கை' உருவாக்கிட அதற்கென புதுக் கொள்கையினை உருவாக்கி, ஆசியாவிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்பக் கட்டடமாக அதனைக் கட்டி, 2000-ஆம் ஆண்டில் அதனைத் திறந்து வைத்தார். இன்று உலகம் முழுவதும் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஐ.டி.துறையில் கோலோச்ச அடித்தளம் அமைத்தவர் முதல்வர் கலைஞர். 5.7.2000 அன்று தமிழ் இணையக் கல்விக் கழகம் தோற்றுவிக்கப் பட்டது.

**இன்று தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறை இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறது. உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இது தான் கலைஞரின் வரலாற்றுச் சாதனையாகும்.**

கலைஞர் என்ற பெயரை ஒரு பல்கலைக் கழகத்துக்கு வைப்பது மிகமிகப் பொருத்தமானதே எனவே தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**'காமராசர் அவர்கள், கல்வியைக் கொடுத்து கண் திறந்தார், கலைஞர் அவர்கள் எழுந்து நடக்க வைக்க வேண்டும்' என்று சொன்னார் தந்தை பெரியார். எழுந்து நடக்க வைத்தவர் கலைஞர். அதலட் ஓடி வெற்றி பெறுவதைப் போல வெற்றி பெற வைத்துக் கொண்டிருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**தமிழ்நாடே கல்வியில் சிறந்த பல்கலைக் கழகமாக ஆக - பல்கலைக் கழகங்களின் நிரந்தர வேந்தராக அவர் ஆன அரசியல் புரட்சியும் காரணமாக அமையப் போகிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 26.4.2025 அன்று முகாம் அலுவலகத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மனைவியுடன் சந்தித்து, தனது மகன் மருத்துவர் அரவிந்த் ராதாகிருஷ்ணன் அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் இந்திய அளவில் 80வது இடத்தைப் பெற்று தேர்ச்சி பெற்றதையொட்டி வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

### பொள்ளாச்சி தொகுதி புரவிப்பாளையம் ஊராட்சியில்

## புதிதாகக் கட்டப்பட்ட குடிநீர் தொட்டிகளில் நீரேற்ற நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் - கவன ஈர்ப்பில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

சென்னை, ஏப். 28-

**சட்டப்பேரவையில் பொள்ளாச்சி தொகுதி, புரவிப்பாளையம் ஊராட்சி, அம்பரம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் புதிதாகக் கட்டப்பட்ட குடிநீர் தொட்டிகளில் நீரேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து பொள்ளாச்சி வி.ஜெயராமன் சிறப்பு கவனஈர்ப்பு கொண்டு வந்து பேசியதைத் தொடர்ந்த நகராட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்து பேசியதாவது:-**

இப்போது முதலமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி தொகுதிக்கு மட்டும் அறிவித்திருக்கிற புதிய திட்டங்களை சொல்கிறேன். பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் பொள்ளாச்சி நகராட்சி, பெரிய நெகமம் பேரூராட்சி, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியங்களைச் சார்ந்த 303 ஊரக குடியிருப்புகள் உள்ளன. நகர குடியிருப்புகளில் பெரிய நெகமம் பேரூராட்சியிலுள்ள 1,544 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 60லிருந்து 70 லிட்டர் வீதமும், தினம் தினம் குடிநீர் வழங்கப்படுகிறது. இதில் 8.10 இலட்சம் லிட்டர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்படும். சூளேஸ்வரம், பெரிய நெகமம், கிணத்துக்கடவு பேரூராட்சிகள் மற்றும் 64 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வழங்கப் படுகிறது.

பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியங்களை சேர்ந்த 171 குடியிருப்புகளிலுள்ள 1 இலட்சத்து 81 ஆயிரத்து 894 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் சூளேஸ்வரன்பட்டி, பெரிய நெகமம், கிணத்துக்கடவு பேரூராட்சிகள் மற்றும் 64 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக் கடவு மற்றும் குடிமங்கலம் ஒன்றியங்கள் உட்பட 295 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 63 ஊரக குடியிருப் பான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்போது பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, கிணத்துக்கடவு மற்றும் குடிமங்கலம் ஒன்றியங்கள் உட்பட 295 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஜல் ஜீவன் திட்ட இயக்க நிதியின்கீழ் 9.53 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்புப் பணியும், பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 212 குடியிருப்புக்கான குடிநீர் திட்டம் 85,200 மக்களுக்கு பயன்பெறும் வகையில் 69.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ஊராட்சியிலுள்ள குடியிருப்புகளுக்கு 55 லிட்டர் வீதம் கொடுக்கப்படும்.



நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பகுதிகளுக்கு 3 திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர், வேட்டைக்காரன் புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தவும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு மற்றும் கிணத்துக் கடவு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்தவும், மேலும், 2025-2026 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில், நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரின்போது பராமரிப்பிலுள்ள 102 குடிநீர்த் திட்டங்கள், 675 கோடி ரூபாயில் மறுசீரமைப்பு செய்யப்படும் என்று அறிவிக்கப் பட்டு, கோயம்புத்தூர் மாவட்டம், பில்லூர்1 கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர்க் குழாய்கள் வழித்தடத்திலுள்ள பழைய AC குழாய்கள் DI குழாய்களாக மாற்றி வடிவமைக்கப்பட்டு, குடிநீர் வழங்குவதற்கு 3 திட்ட மதிப்பீடுகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. உறுப்பினர் அவர்கள், புதிதாக கட்டப்பட்ட 4 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 1 sumpகீழ் நிலை நீர்த் தேக்கத் தொட்டி குறித்து சொன்னார்கள்.

அதுகுறித்து, அதிகாரிகள்மூலம் நேற்று ஆய்வு செய்யச் சொல்லி, காலையிலேயே அறிக்கை என்னிடம் வழங்கப் பட்டுள்ளது. மோட்டார்கள் மிகவும் பழுதாக இருப்பதால், அவற்றை மாற்ற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக 30 லட்சம் ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டு, உடனடியாக புதிய மோட்டார்கள் பொருத்துகிற பணி ஒரு வாரத்தில் முடிவடைந்து, அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் குடிநீர் ஏற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகை தந்த போது, அந்த விழா மேடையிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்து அறிவித்திருக் கிறார்கள். எனவே, இந்த ஆண்டு விரைவாக அந்தப் பணிகள் தொடங்கப்படும். ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றுவதற்குரிய அனைத்து நடவடிக்கை களும் ஒருவார காலத்தில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அறிவித்தார்.

### தீப்பெட்டி தொழில் நசிந்து வருவதால்

## கேஸ் லைட்டர்களுக்கு தடைவிதிக்க அரசு உரிய நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்!

**சென்னை, ஏப். 28-**

**சட்டப்பேரவையில் தீப்பெட்டித் தொழிலுக்கு சவாலாக 'லைட்டர்' பயன்படுத்தப்படுவதினால் அந்த லைட்டருக்கு தடைவிதிக்கக் கோரி உறுப்பினர் கடம்பூர் ராஜூ கொண்டு வந்த கவன ஈர்ப்புக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதில் வருமாறு:-**



நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின் படி, தமிழ்நாட்டில் ஏற்கெனவே, ஒரு முறை மட்டும் பயன்படுத்தித் தூக்கி எரியக்கூடிய 14 வகையான plastic பொருட்களுக்கு ஏற்கெனவே தடை நடைமுறையிலே இருக்கிறது. உறுப்பினர் கடம்பூர் ராஜூ அவர்கள் குறிப்பிடுவதைப்போல, தென் மாவட்டங்களிலே குறிப்பாக கோவில்பட்டி, சிவகாசி, சாத்தூர் இந்தப் பகுதிகளில் எல்லாம் தீப்பட்டித் தொழிலிலே ஈடுபட்டு இருக்கக் கூடிய மக்களுக்கு, இந்த lighter என்பது ஒரு மிகப் பெரிய வாழ்வாதாரப் பிரச்சினையாக உருவாகியிருப்பதை நாம் அறிவோம். அது குறித்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் மற்ற எல்லோருமே சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையில் அண்ணன் அவர்களிடத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களிடத்திலும், அதைப்போல நம்முடைய தூத்துக்குடி சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் என்னிடத்திலும் அவர்கள் முறையிட்டிருந்தார்கள்.

**பேரவைத் தலைவர்:** சபாநாயகர் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள். நானும் கொடுத்திருக்கிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** சபாநாயகருக்கு தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய கோரிக்கையும் உங்களிடம் வருவதைப் போல, சபாநாயகர் அவர்களும் அதை அவசியமாக செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். இதிலே ஒரு முறை பயன்படுத்தித் தூக்கி எரியக்கூடிய இந்த cigarette lighters அது gas நிறப்பப்பட்டு இருந்தாலும் சரி, நிறப்பப்படாமல் இருந்தாலும் சரி, ரூ.20க்கு கீழே இருக்கக்கூடிய இந்த gas lightersல் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது என்பதை நாம் அறிவோம். எனவே, இதை முற்றிலுமாக தடை செய்வதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தன்னுடைய பரிந்துரையை, நாம் அளித்திருக்கக்கூடிய கோரிக்கையின் அடிப்படையில் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை இப்போது அரசுக்கும் அளித்திருக்கிறார்கள். அரசினுடைய பரிசீலனையில் அது இப்போது இருக்கிறது. விரைவில் நான் முதல மைச்சர் அவர்களிடத்திலே ஒப்புதல் பெற்று, உறுப்பினர் கடம்பூர் ராஜூ அவர்கள் கூறியபடி, நாம் அதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.



'வெள்ளுடை வேந்தர்' சர்.பிட்டி தியாகராயர் அவர்களின் 174வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.04.2025) தமிழ்நாடு அரசின் சார்பில், பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.